


17.05.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு வரும் 20-ம் தேதி நடைபெறும் 5-வது கட்ட தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அரசியல் தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

2. 57 மக்களவை தொகுதிகளுக்கு நடைபெறும் 7-வது கட்ட தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்றுமாலை வெளியிடப்படுகிறது.

3. தமிழ்நாட்டில் அரசு உயர் கல்வி நிறுவனங்களில் மாற்றுத்திறனாளி மாணாக்கருக்கு 5 சதவிகித இடஒதுக்கீட்டை உறுதிசெய்ய பல்கலைக் கழகங்களை மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

4. கனமழை எச்சரிக்கை காரணமாக சுற்றுலா பயணிகள் அடுத்த 3 நாட்களுக்கு நீலகிரி மாவட்டம் வருவதை தவிர்க்க வேண்டுமென்று மாவட்ட நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

5. தாய்லாந்து ஓப்பன் பேட்மிட்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் காலிறுதி ஆட்டத்தில் சிராக்ஷெட்டி, ரான்கி ரெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□□

5-வது கட்டம்

5-வது கட்டமாக 49 மக்களவை தொகுதிகளுக்கு வரும் 20-ம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை முடிவடைவதால் இதற்குட்பட்ட பகுதிகளில் அரசியல் கட்சி தலைவர்கள் உச்சக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உத்திர பிரதேச மாநிலம் பாரா பங்கியில் தேர்தல் பிரச்சார வாகன பேரணியின் போது இன்று உரையாற்றிய பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான

திரு. நரேந்திரமோடி, அரசியல் லாபத்திற்காக சமாஜ்வாடி கட்சி மேற்கு வங்கத்திடம் அடைக்கலம் புகுந்துள்ளதாக குறை கூறினார்.

முத்தலாக் தடை சட்டம் நடைமுறை படுத்தப்பட்டதால் இஸ்லாமிய பெண்கள் பி.ஜே.பி.க்கு ஆதரவு தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

தத்தம் தொகுதிகளில் வளர்ச்சி விரும்புவோர் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று அவர் கோரினார்

வலுவான ஆட்சியை பி.ஜே.பி.யால் மட்டுமே வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து மஹாராஷ்டிர மாநிலத்தில் அவர் இன்று தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல்காந்தி ரேபரேலியில் இன்று மேற்கொண்ட தேர்தல் பரப்புரையில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் மாதந்தோறும் 10 கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

கல்வி, வேலைவாய்ப்பு ஊக்குவிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாளை மாலையுடன் பிரச்சாரம் ஓய்வதால் சமாஜ்வாடி உள்ளிட்ட பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும், தலைவர்களும் தத்தம் சார்ந்த கட்சிகளுக்கு வாக்குதிரட்டும் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

□□□□□□□□

தேர்தல் 7-ம் கட்டம்

இதனிடையே மக்களவைக்கு வரும் 1-ம் தேதி நடைபெறும் 7-வது இறுதி கட்ட தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்றுமாலை வெளியிடப்படுகிறது.

இத்தொகுதிகளில் வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

நாடுமுழுவதும் 7 கட்ட மக்களவை தேர்தல் வாக்குகள் வரும் 4-ம் தேதி எண்ணப்படுகின்றன.

□□□□□□□□

காகிதமில்லா வர்த்தகம்

மின்னனு வர்த்தகப்பாதையில் நம்நாடு முன்னேறி வருவது பாராட்டுக்குரியது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சகத்தின் வெளிநாட்டு வர்த்தக பிரிவு துணை தலைமை இயக்குநர் திரு. வெங்கடேஷ் கூறியிருக்கிறார்.

புதுதில்லியில் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான வர்த்தக நிதி 5-வது தேசிய உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், 93.55 சதவிகித அளவிற்கு நம்நாட்டின் சர்வதேச வர்த்தக பரிவர்த்தனை உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

வர்த்தகர்கள், வங்கியாளர்கள், நிதித்துறை அதிகாரிகள், பங்குதாரர்கள் உள்ளிட்டோர் எதிர்கால வர்த்தக - நிதி மேலாண்மைக்கான தொழில்நுட்ப மேம்பாடு நிலைப்பாடுகளை கண்டறிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற நித்தி ஆயோக்கின் மூத்த ஆலோசகர் திரு. சஞ்சீத் சிங், 2047-ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த தேசமாக நம்நாடு முன்னேற நிதி வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் அவசியம் என்று குறிப்பிட்டார்.

□□□□□□□□

12-வது கூட்டுக்குழு

இந்தியா மங்கோலியா நாட்டு பாதுகாப்பு செயலர்கள் நிலையிலான 12-வது கூட்டு அமைச்சக பேச்சுவார்த்தைகள் அந்நாட்டின் தலைநகரான உலான் பாத்தரில் இன்று நிறைவடைந்தது.

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து இதில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டதோடு தற்போதைய புவி அரசியல் நிலைமை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து இந்த பேச்சுவார்த்தைகளின் போது திருப்தி வெளியிடப்பட்டது.

பாதுகாப்பு துறை இணைசெயலர் திரு. அமிதாப் பிரசாத் இந்தியா சார்பில் இந்த பேச்சுவார்த்தைமயில் பங்கேற்றார்.

□□□□□□□□

உலக தொலைத் தொடர்பு தினம்

உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூதாய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இணையதளம் சார்ந்த தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்கள் குறித்து உரிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.

மின்னனு பொருளாதாரத்திலும் அதுசார்ந்த அனைத்து அம்சங்களிலும் குடிமக்கள் ஆளுமையுடன் திகழும் இச்சூழலில், மின்னணு தொழில்நுட்ப பிரிவில் சர்வதேச நாடுகளுக்கு முன்னோடியாக நம்நாடு முன்னேறி வருவதை எடுத்துரைக்கும் வகையில் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

□□□□□□□□

நிர்மலா சீதாராமன்

2047-ம் ஆண்டிற்குள் இந்தியா வளர்ச்சி அடைந்த தேசமாக உருவாவதில் தனியார் துறை பெரும் பங்காற்றும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்

புதுதில்லியல் இன்று வர்த்தகர்கள் நிகழ்ச்சியில் உரையாற்றியஅவர், அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி உலகளவில் 18 சதவிகிதமாக இருக்கும் என்றார்.

தயாரிப்பு மற்றும் சேவை பிரிவில் இந்தியாவின் திறன் வளர்ந்து வருவதை எடுத்துரைத்தஅவர், நம்நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சி வரும் ஆண்டுகளிலும் தொடரும் என்றார்.

□□□□□□□□

இடஒதுக்கீடு

தமிழ்நாட்டில் உயர் கல்வி நிறுவனங்களில் மாற்றுத்திறனாளி மாணாக்கருக்கு 5 சதவிகித இடஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து அரசு தனியார் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் பொறியியல், கலை அறிவியல், மருத்துவம், சட்டம் உள்ளிட்ட அனைத்து வகையான படிப்புகளுக்கும் இம்மாணாக்கருக்கான இடங்களை நிரப்ப வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

□□□□□□□□

100 யூனிட் மின்சாரம் ரத்து

தமிழகத்தில் அனைத்து வீடுகளிலும் 100 யூனிட் மின்சாரம் ரத்து என்று வெளியாகும் தகவல்கள் தவறானவை என்று அரசு தெளிவுபடுத்தி உள்ளது.

ஒரு வீட்டின் உரிமையாளர் ஒன்றுக்கும் மேற்பட்ட இணைப்புகள் வைத்திருந்தால் அவருக்கு 100 யூனிட் மின்சாரம் மட்டுமே மானியமாக வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இதனிடையே தமிழகத்தில் அனைத்து விண்ணப்ப தேவைகளுக்கும் ஒரே இணையதளம் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படுவதாக மின்வாரியம் கூறியுள்ளது.

புதிய மின் இணைப்பு பெற மின்சாரம் தொடர்பான குறைகளை தெரிவிக்க ஒரேவலைதளத்தை பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□

எடப்பாடி கே. பழனிச்சாமி

தமிழகத்தில் போதை பொருட்களின் பயன்பாட்டை தடுக்கும் நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்த வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் போதைபொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து அதில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூறியுள்ளார்.

இதனிடையே அரக்கோணத்தில் எர்ணாகுளம் அதிவிரைவு ரயிலில் போதைபொருள் கடத்தி வந்த 2 பேரை காவல்துறையினர் இன்று கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 16 கிலோ போதைபொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

□□□□□□□□

பள்ளி வாகனங்கள்

தமிழகத்தில் கோடை விடுமுறைக்கு பின்னர் பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட உள்ள நிலையில் பள்ளி வாகனங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கையை அரசு தீவிரப்படுத்தி உள்ளது.

மாநிலம் முழுவதும் அனைத்து பள்ளி வாகனங்கள் தணிக்கை செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 264 தனியார் பள்ளி வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டதில் குறைபாடு காணப்பட்ட 10 பள்ளி வாகனங்கள் மறுஆய்விற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

□□□□□□□□

வானிலை

தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, கடலூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்தில்

இடிமின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை பலத்த காற்று காரணமாக நெல்லை மாவட்டத்தில் மீனவர்கள் இன்று மீன்பிடிக்க செல்லவில்லை.

ஆயிரத்து 200 நாட்டுப்படகுகள் கடற்கரையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது

□□□□□□□□

வானிலை தொடர்ச்சி

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கன்னியாகுமரி திருநெல்வேலி தென்காசி மாவட்டங்களில் இன்று கன முதல், மிக கன மழையும், நீலகிரி கோவை மாவட்ட மலைபகுதிகள்,

திருப்பூர் திண்டுக்கல் தேனி விருதுநகர் மதுரை சிவகங்கை ராமநாதபுரம் தூத்துக்குடி புதுக்கோட்டை மாவட்டங்களில் கன மழையும், பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பரவலாக வரும் 23ஆம் தேதிவரை மிதமானது முதல் கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக தமிழக எல்லையான பிலிகுண்டுலுவிற்கு நீர்வரத்து வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

□□□□□□□□

நீலகிரி வாய்ஸ்

நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு கனமழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் மாவட்ட நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளது

மழையை கருத்தில் கொண்டு சுற்றுலா பயணிகள் அடுத்த 3 தினங்களுக்கு நீலகிரி பயணத்தை தவிர்க்க மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா அறிவுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

உப்பளம்

நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் தொடர்ந்து பெய்த கோடை கனமழையின் காரணமாக உப்பு உற்பத்தி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

உப்பளங்களில் மழைநீர் தேங்கி காணப்படும் நிலையில் விட்டு விட்டு மழை பெய்து வருவதால் வெளி மாநிலங்களுக்கு லாரிகளில் உப்பை ஏற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

□□□□□□□□

ரயில்

சென்னை எழும்பூர் விசாகப்பட்டினம் இடையே வரும் 28, அடுத்த மாதம் 4, 11, 18, 25 ஆகிய நாட்களில் கோடைக்கால சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.

இதனிடையே காரைக்குடியில் மேற்கொள்ளப்படும் தண்டவாள பராமரிப்பு காரணமாக நாளைமறுநாள் திருச்சி - ராமேஸ்வரம் அதிவிரைவு ரயில் சேவை,

காரைக்குடி - திருச்சி பயணிகள் ரயில் இரு மார்க்கங்களிலும் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தென் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று தென்காசி செங்கோட்டை இடையே கூடுதல் ரயில் இன்று இயக்கப்பட்டதை தொடர்ந்து அந்த ரயில் செங்கோட்டை ரயில் நிலையத்திற்கு இன்று வந்தடைந்த போது பயணிகள் சங்கத்தினர் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த ரயில் போக்குவரத்து தொடர்ந்து இயக்கப்பட வேண்டுமென்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

50 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முதலாக செங்கோட்டையிலிருந்து திருவனந்தபுரம் வழியாக கொச்சுவேலிக்கு இந்த ரயில்சேவை இயக்கப்படுகிறது.

□□□□□□□□

பேட்மிட்டன்

பேங்காக்கில் நடைபெறும் தாய்லாந்து ஓப்பன் பேட்மிட்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சிராக்ஷெட்டி, ரான்கி ரெட்டி இணை - மலேசிய இணையை எதிர்கொள்கிறது.

□□□□□□□□

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்றிரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

□□□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.